www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

THEN CHITTU *
FORTNIGHTLY *

# தேன்சிட்டு

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்

- 01-15 செப்டம்பர் 2024
- சிட்டு 3 • இதழ் 43
- விலை : ரூ. 20/-
- சென்னை

- 01-15 SEPTEMBER 2024
- Chittu 3 • Issue 43
- Price : Rs. 20/-
- Chennai



## நாய்களுக்கு வியர்க்குமா?

அறிந்துகொள்ள
9ஆம் பக்கம்
வாங்க...


தினமும் மதியம்
வாசிப்பு நேரம்
1:00 மணி முதல்
1:20 மணி வரை


திருடர்களிடம் மாட்டிய வணிகர் 08


ஒரு துண்டு நிழல் 14


அணைக்கட்டு நாயகன் 21 →


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



# கண்டுபிடியுங்கள்

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரியும்தானே.. கீழே கலைந்துள்ள எழுத்துகளில் சில மாவட்டங்களின் பெயர்கள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடி!

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | யி | லா | டு | து | றை | கி | தூ | வா | த |
| க | ம் | தி | தே | கு | ப் | தொ | த் | கொ | ரு |
| தி | ரு | ச் | சி | ரா | கி | கே | து | சா | ம |
| ரு | ச | ம் | வ | ழ் | பா | ரா | க் | வை | பு |
| ப் | பா | ப் | க | ன் | னி | யா | கு | ம | ரி |
| பூ | த் | தி | ங் | பு | ம | ட் | டி | ர | து |
| ர் | ரோ | க | கை | தி | ண் | வே | மை | ட் | கு |
| சி | பு | ன் | ங் | கு | க | ளி | சே | ல | ம் |
| ம் | வி | ரு | து | ந | க | ர் | பை | சு | ணா |
| ப | அ | இ | ரா | வி | ழு | ப் | பு | ர | ம் |



விடைகள்: 20ஆம் பக்கம்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!

# கப்பல் ஏறுவேன்




அப்பா வோடு நானுமே
கப்பல் ஏறப்போகிறேன்.
கப்பல் ஏறி உலகெலாம்
கண்டு நானும் திரும்புவேன்.
அப்பா வோடு நானுமே
கப்பல் ஏறப் போகிறேன்
அப்பா லுள்ள நாடுகள்
அனைத்தும் கண்டு திரும்புவேன்.
அப்பா வோடு நானுமே
கப்பல் ஏறப் போகிறேன்
எப்போ கப்பல் ஏறுவேன்
என்று தானே கேட்கிறீர்?
அப்பா கப்பல் ஏறிடும்
அன்றே நானும் ஏறுவேன்
அப்போ உங்கள் அனைவரின்
ஆசி பெற்றுச் செல்லுவேன்.

– அழ. வள்ளியப்பா



4 முடிவே இல்லாத கதை


10 பாலித்தீன் பையில் பாராசூட் செய்யலாம்


16 பேரீச்ச மரம்


18 ரொம்பச் சத்தம்


22 நலம் தரும் அதிமதுரம்



தேன்சிட்டு
Then Chittu Fortnightly

- 01 - 15 செப்டம்பர் 2024
- சிட்டு 3 ★ இதழ் 43
- 01-15 SEPTEMBER 2024
- Chittu 3 ★ Issue 43

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

பொறுப்பாசிரியர் :
யெஸ். பாலபாரதி

இணையாசிரியர்கள்:
விஷ்ணுபுரம் சரவணன்,
பொன். மூர்த்தி

ஆசிரியர் குழு:
இரா. அருண்பாண்டியன்,
பி. சுகுணாதேவி, வி.விஜயகுமார்,
து. மலர்விழி ஜூலியட்

வடிவமைப்பாளர்கள்:
எஸ். சீனிவாசராவ்,
பி. வன்மிகநாதன், பூ. சேஷாத்ரி

அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in ❖ சந்தா குறித்த தகவல்களுக்கு : magazine.subscription@tnschools.gov.in

பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, எண் 68, கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
அச்சகம் : ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட், 69-71/A சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம், அகு.எண் – 600 124.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# முடிவே இல்லாத கதை

**ஓர் அரசனுக்குக் கதைகள் கேட்பது என்றால் மிகவும் பிடிக்கும். அரண்மனையில் கதை சொல்லி ஒருவர் இருந்தார். அவர் தினமும் அரசனுக்குக் கதைகள் சொல்வார். ஆனால், அந்தக் கதைகள் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்திலேயே முடிந்துவிடும். அரசனோ முடிவே இல்லாத மிகப் பெரிய கதையைக் கேட்க ஆசைப்பட்டார்.**

'முடிவே இல்லாத கதையைச் சொல்லும் நபருக்கு ஒரு லட்சம் பொற்காசுகள்' என்றும் 'ஒருவேளை சொல்லும் கதையில் முடிவு வந்துவிட்டால் நாட்டை விட்டே வெளியேற்றப்படுவார்' என்றும் அறிவித்தார்.

இந்தச் செய்தி நாடு முழுக்கச் சென்றது. பலரும் போட்டிப் போட்டுக்கொண்டு கதைகளைச் சொல்ல வந்தனர். சிலரின் கதைகள் ஒரு மணி நேரமும், சிலரின் கதைகள் ஐந்து மணி நேரமும், இன்னும் சிலரின் கதைகள் பத்து மணி நேரமும் நீடித்தன. ஆனால் கதை முடிவுக்கு வந்துவிட்டது. உடனே அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற உத்தரவிட்டார் அரசர்.

அடுத்த இரண்டு நாட்களில் கதை சொல்ல யாருமே வரவில்லை. மூன்றாம் நாள் ஒருவர் வந்தார்.

"நீ சொல்லும் கதைக்கு முடிவு வந்துவிட்டால் நீ மட்டுமல்ல... உன் குடும்பமே நாட்டை விட்டு வெளியேற வேண்டும்" எனப் புதிய விதியை அறிவித்தார். அதையும் ஏற்றுக்கொண்டு அந்த மனிதர் கதையைத் தொடங்கினார்.

"ஒரு பெரிய நாடு. அந்த நாட்டில் உள்ள தானியக் கிடங்கில் பல நூறு மூட்டைகளில் நெல்மணிகள் இருந்தன. அங்குள்ள காவலாளி ஒரு மூட்டையைப் பிரித்து ஒரே ஒரு நெல்லை எடுத்து அங்கே பறந்துவந்த கிளிக்குப் போட்டார். இன்னொரு நெல்லை எடுத்து வேறொரு கிளிக்குப் போட்டார். அடுத்த நெல்லை எடுத்து அடுத்து வந்த கிளிக்குப் போட்டார்" என்று ஒவ்வொரு நெல்லாகக் கதையைத் தொடர்ந்துகொண்டே போனார். பகல் முடிந்து இரவானது. அப்போதுதான் காவலாளி அடுத்த மூட்டையைப் பிரிப்பதாகக் கதையைத் தொடர்ந்தார்.

நள்ளிரவு ஆகியும் கதை தொடர்ந்தது. சோர்ந்துபோன அரசர், "இந்தக் கதை நிஜமாகவே முடியாது. நீ திறமையான கதை சொல்லிதான். உனக்கு இலட்சம் பொற்காசுகளோடு அரண்மனையில் கதை சொல்லியாகவும் வேலை தருகிறேன்" என்றார் அரசர்.

அந்தக் கதை சொல்லி மகிழ்ச்சியோடு வீட்டுக்குச் சென்றார்.

– மீனா




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# "எழுத்தாளராக மனிதர்களையும் படிக்க வேண்டும்"

-கிருங்கை சேதுபதி



**சிறார்களுக்காகத் தொடர்ந்து எழுதி வருபவர் பேராசிரியர் கிருங்கை சேதுபதி. சாகித்திய அகாதெமியின் பால சாகித்திய புரஸ்கார் விருது, குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். அவருடன் உரையாடியதில் இருந்து...**

**சிறு வயது முதலே உங்களுக்கு இலக்கிய நூல்கள் வாசிக்கும் பழக்கம் இருந்ததா?**

பள்ளிக்குப் போகுமுன்பே, எனக்கு வாசிக்கவும் மனப்பாடம் செய்யவும் சொல்லிக் கொடுத்தவர் என் அப்பா. வீட்டுக்கு வரும் பத்திரிகைகளின் பக்கங்களை உரக்க வாசிக்கச் சொல்லிக் கேட்பார். தேவார, திருமுறைகள் எனக்கு மனப்பாடமாகத் தெரியும். பாடம் தாண்டிப் படிக்க எங்கள் வீட்டில் ஏராளமான நூல்கள் இருந்தன. தெளிவாக உச்சரிக்கவும் சரியாகப் பொருள் புரிந்துகொள்ளவும் நுட்பமாகக் கருத்துகளை உணர்ந்துகொள்ளவும் அவை எனக்குப் பெரிதும் உதவின. அதுமட்டுமல்ல, சுயமாக எழுதவும் பேசவும் கற்றுக் கொடுத்தன.

**எப்போதும் உங்கள் நினைவிலேயே இருக்கும் படைப்பு எது?**

எத்தனையோ உள்ளன! புறநானூற்றில் இடம்பெறும் 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' என்ற பாடல்தான் என் மனம் கவர்ந்து நினைவில் நிரந்தரமாகத் தங்கியுள்ள பாடல். பின்னர், பாரதியார், கவிமணி பாடல்கள் என்று பலவும் உள்ளன.

**புதிய படைப்புகள் எழுதுவதற்கான கருக்கள் எங்கிருந்து கிடைக்கின்றன?**

வாழ்க்கையில் இருந்துதான்! நம்மைச் சுற்றி நடக்கிற நிகழ்வுகளில், பேசுகிற உரையாடல்களில் எத்தனையோ கதைகளும் பாடல்களும் இருக்கின்றன. அதிலும் பெரியவர்களை விடவும், சின்னக் குழந்தைகளின் செயல்களும் பேச்சுகளும் என்னைக் கவர்ந்து எழுதத் தூண்டுகின்றன.



**குழந்தைகளுக்கு என நீங்கள் எழுதிய முதல் படைப்பு எது?**


பள்ளியில் படிக்கும்போது நான் எழுதிய 'கர்த்தர் மன்னிப்பார்' எனும் கதை 'பூந்தளிர்' இதழில் வெளிவந்தது. தொடர்ந்து, கோகுலம், ரத்னபாலா, அமுதசுரபி, தினமணி சிறுவர் மணி, மின்மினி இதழ்களில் எழுதினேன். ஒசூர் டி.வி.எஸ். அகாடமி பள்ளியில் சிறுவர்களுக்காக எழுதிய பாடல்களைத் தொகுத்து, 'பூந்தடம்' என்னும் முதல் தொகுப்பாக்கினேன். அதற்கு முன்னுரை எழுதியவர் என்னிடம் பயின்ற பள்ளி மாணவி, ஸ்வர்ணா. அப்பாடல்கள் பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட தொகுப்புகளாக வந்திருக்கின்றன.

**நீங்கள் எழுதிய நூல்கள் குறித்து...**

வெவ்வேறு துறைகளில், தனித்தும் தொகுத்தும் 150க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறேன். குழந்தைகளுக்காக, இரு சிறுகதைத் தொகுப்புகளையும், பூந்தடம், சிரிக்கும் பனைமரம், சிறகு முளைத்த யானை, எறும்பின் கனவு, தேர்வு எழுதிய பூதம் ஆகிய பாடல் தொகுப்புகளும், 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' என்ற நாடகத் தொகுப்பும் வெளிவந்திருக்கின்றன. சிறுவர் கதைக் களஞ்சியம், சிறுவர் கதைப் பாடல்கள் ஆகிய நூல்கள் சாகித்திய அகாதெமி வெளியீடுகள். இவை போக சிறுவர் இலக்கியம் குறித்து எழுதிய நூல்கள் சில வெளிவந்துள்ளன.

**மாணவர்கள் இலக்கிய நூல்களை ஏன் வாசிக்க வேண்டும்?**

விதை போடாமல், செடி முளைக்காது. மரம் வளராது. எதை எழுதுவது, எப்படி எழுதுவது என்பதைக் கற்றுக் கொள்ள இலக்கிய நூல்களை வாசித்தே ஆகவேண்டும்.





**மாணவர்களால் புதிய கதைகளை எழுத முடியுமா?**

நிச்சயமாக முடியும். நான் உட்பட பலரும் மாணவப் பருவத்திலேயே எழுதியவர்கள் தான். வகுப்பறை தாண்டி, வாழ்க்கை கற்றுக் கொடுக்கிற அனுபவங்களை, படிப்பினைகளை மாணவ, மாணவியரால் சிறப்பாக, கதைகளாக, பாடல்களாக, ஓவியங்களாக, நடிப்பாக வெளிப்படுத்த முடியும். ஆர்வம் உள்ள மாணவர்கள் தயங்காது படைப்பாக்க முயற்சிகளைத் தொடரவேண்டும்.

**எழுத்தாளராக வளர என்ன செய்ய வேண்டும்?**

நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். மேலும், மனிதர்களையும் மற்ற உயிர்களையும் படிக்க வேண்டும்; அனைத்தையும் நேசிக்க வேண்டும். இவற்றைத் தொடர்ந்து செய்துவந்தால் சிறந்த எழுத்தாளராக மட்டுமல்ல, ஆரோக்கியமான மனிதர்களாகவும் வாழ முடியும்; வாழவும் வேண்டும்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# நட்பு

நம் பழம் தமிழ் இலக்கியத்தில் புலவர்களோடு மன்னர்கள் மிகுந்த நட்பு பாராட்டினர். அப்படியான புலவர் - அரசர் நட்பு பட்டியல் கீழே உள்ளது. ஆனால், புலவர்களுக்கு உரிய அரசர்களின் பெயர்கள் இடம் மாறியுள்ளன. அவற்றைக் கண்டறிந்து பொருத்துக.

| | | |
|---|---|---|
| ஔவையார் | - | பெருஞ்சேரல் இரும்பொறை |
| பிசிராந்தையார் | - | சடையப்ப வள்ளல் |
| கபிலர் | - | கோப்பெருஞ்சோழன் |
| கம்பர் | - | பாரி |
| மோசிகீரனார் | - | அதியமான் |



விடைகள்:

ஔவையார் - அதியமான்
பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன்
கபிலர் - பாரி
கம்பர் - சடையப்ப வள்ளல்
மோசிகீரனார் - பெருஞ்சேரல் இரும்பொறை

# ஈ, தா, கொடு வேறுபாடு

ஈ : செல்வத்திலோ, வயதிலோ, பதவியிலோ குறைந்தவர்கள், அவர்களை விட மேலானவர்களிடம் ஒன்றைப் பெறுவதற்குப் பயன்படுத்துவது.

தா : ஒரே வயதினர், ஒரே பதவியில் இருப்பவர்கள், நண்பர்களுக்கு இடையே பெறுவதற்குப் பயன்படுத்துவது.

கொடு : தன்னைவிடச் சிறியவர்களிடம் அதிகாரமாகக் கேட்பது.



உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?

பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

14417

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# வரிசைப்படுத்தினால் ஒரு வார்த்தை!

கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளைச் சரியாக வரிசைப்படுத்தினால் உணர்வுகளை வெளிப்படுத்தும் சொற்கள் கிடைக்கும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | H | P | Y | P | | |
| 2 | A | R | N | Y | G | | |
| 3 | D | A | S | | | | |
| 4 | E | D | T | I | E | X | C |
| 5 | E | B | R | O | D | | |
| 6 | E | D | R | S | A | C | |




Answers:
1. Happy மகிழ்ச்சி, 2. Angry கோபம்
3. Sad சோகம், 4. Excited உற்சாகம்
5. Bored சோர்வாக, 6. Scared பயமாக

# Riddles



1. What appears once in a minute, twice in a moment, but not once in a thousand years?




2. I have cities, but no houses. I have forests, but no trees. I have water, but no fish. What am I?

Answers:
1. Minute-இல் Moment-இல் M வரும் Thousand years-இல் M வராது.
2. Map

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# திருடர்களிடம் மாட்டிய வணிகர்



**அந்தக் காலத்தில் பணம் எல்லாம் கிடையாது. தங்கம், வெள்ளி நாணயங்களை வைத்துதான் வணிகம் செய்வார்கள். வணிகர் ஒருவர் நகரத்திற்குச் சென்று தன் பொருள்களை விற்பனை செய்துவிட்டு கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் இடுப்பில் ஒரு பையைக் கட்டியிருந்தார். தலையில் சின்ன மூட்டையை வைத்திருந்தார்.**

காட்டின் வழியே அவர் வரும்போது எதிரில் திருடர்கள் சூழ்ந்துகொண்டனர். மடியில் உள்ள பையைப் பிடித்தவாறே வேகமாக ஓடினார். அவரைத் திருடர்கள் துரத்தினர்.

வேகமாக ஓடவேண்டி இருந்ததால் வணிகர் தலையில் உள்ள மூட்டையைக் கீழே போட்டுவிட்டு வேகமாக ஓடினார். அந்த மூட்டையைக் காலால் அழுத்திப் பார்த்தான் திருடர்களில் ஒருவன்.

“துணிகள்தான் இருக்கு... அதான் கீழே போட்டுவிட்டு ஓடுகிறார். துரத்துங்க” என்று கத்தவும் மற்றவர்கள் வணிகரை மீண்டும் துரத்தினர்.

ஒரு கட்டத்தில் வணிகரைத் திருடர்கள் பிடித்துவிட்டனர். அவர் மடியில் இருந்த பையைப் பிடுங்கிப் பார்த்தால் அதில் பத்து வெள்ளி நாணயங்கள் இருந்தன.

“இதற்காகத்தான் இவ்வளவு தூரம் ஓடி வந்தாயா?” என்று திட்டிக்கொண்டே அந்த நாணயங்களை எடுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளிந்தனர்.

அந்த வணிகர் வந்த வழியில் திரும்பவும் வந்து தனது மூட்டையை எடுத்துக்கொண்டு ஊர் திரும்பினார்.

உண்மையில் அந்த மூட்டையில்தான் நூறு தங்க நாணயங்களும் இருநூறு வெள்ளி நாணயங்களும் இருந்தன. சத்தம் வராமல் இருக்க துணியில் முடிந்து வைத்திருந்தார். வணிகரின் புத்திசாலித்தனத்தால் அவை தப்பின.

-மகேஷ்

# A merchant caught under thieves

There was no money in those days. Trade was undertaken using gold and silver coins. A merchant was returning to his village after selling his things in a city. He tied a bag in his waist. He carried a small sack on his head.

When he was passing through a forest, he was caught by a gang of thieves. Holding the waist bag, he ran fast. They chased him.

As he had to run fast, he dropped the sack down and continue running. One of the thieves pressed the bag with his leg. "There are only clothes. So he drops and runs. Chase him", said the thief and the others chased the merchant.

At one stage, the thieves caught the merchant. They seized the bag and found ten silver coins in the bag. They scolded him and said, "You ran for these only" and ran into the forest with the coins. The merchant returned and collected his sack and continued his journey.

Actually, the bag had hundred gold coins and two hundred silver coins. He hid them along with clothes to avoid the clinging of coins. They got escaped because of the presence of mind of the merchant.


-Magesh

Translated by Meenakshi D

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





# முகில் நீர்த்தாரைகள் என்பது என்ன?

சுழல் காற்று, புயல் போன்றவை சுழன்றடிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவை கடல் பரப்பின் மீது ஏற்படுத்துவதைத்தான் முகில் நீர்த்தாரைகள் என அழைக்கின்றனர். நீரும் காற்றும் சேர்ந்து சுழன்று இதை உருவாக்குகின்றன.

சில முகில் நீர்த்தாரைகள் மோசமான வானிலை காரணமாக உருவாகும். அது பார்க்கவே பயங்கரமாக இருக்கும். இதனால் ஆபத்தும் அதிகம். புயல் கடலில் இறங்குவதால் இது நிகழ்கிறது.

நல்ல வானிலையின்போது உருவாகும் முகில் நீர்த்தாரையைப் பார்க்கவே அழகாக இருக்கும். இதற்கு அந்தப் பகுதியின் நீர் வெப்பமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஏனென்றால் இவை பெரும்பாலும் உருவாவது, கிரீஸ், ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரை பகுதியில். அங்கு நீர் வெப்பமாக இருக்கும்.



**ஒளிகளின் நகரம் என்று அழைக்கப்படும் நகரம் எது?**

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ்தான் ஒளிகளின் நகரம் என அழைக்கப்படுகிறது. இரவு நேர பாரிஸைக் காண்பவர்களுக்கு இதற்கான அர்த்தம் புரியும்.

சூரியன் மறைந்த பின்பும் பாரிஸ் நகரம் பிரகாசமாக ஜொலிக்கும். அங்கு மக்கள் சுற்றிப் பார்க்கும் 300 தளங்கள் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பாரிஸில் உள்ள முக்கியமான 37 பாலங்களில், 33 பாலங்களுக்கு ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாது அனைவரையும் வியக்க வைக்கும் ஈபிள் கோபுரமும் விளக்குகளால் ஜொலிக்கும். ஐரோப்பாவில் உள்ள நகரங்களில் தெரு விளக்குகளை அதிகளவில் முதன்முதலாகப் பயன்படுத்தியதும் பாரிஸ்தானாம்.



**உலகிலேயே பெரிய மணி எங்கு உள்ளது?**

உலகிலேயே பெரிய மணி ரஷ்ய நாட்டின் மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் மைதானத்தில் உள்ளது. வெண்கலத்தால் ஆன இந்த மணி கல் பீடத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப் பாகத்தின் சுற்றளவு 68 அடி, உயரம் 21 அடி, சுமார் இரண்டு இலட்சம் கிலோகிராம் எடை கொண்டது. ஒரு சமயம் ஏற்பட்ட தீ விபத்தில் மணியின் ஒரு பகுதி உடைந்து விட்டது. அப்பகுதியும் அங்கே வைக்கப்பட்டுள்ளது. இன்று வரை இம்மணி அடிக்கப்படவில்லையாம்.



**மனிதர்களுக்கு வியர்ப்பது போல நாய்களுக்கும் வியர்க்குமா?**

நாய்களுக்கு மனிதர்களைப் போல உடலில் வியர்வைச் சுரப்பிகள் இல்லை. அவை உடல் வெப்பத்தைக் குறைக்க வேறு வழிகளைப் பயன்படுத்துகின்றன. அவற்றின் பாதங்களில் மட்டும் சில வியர்வைச் சுரப்பிகள் இருக்கும். ஆனாலும் இந்தச் சுரப்பிகள் மனிதர்களைப் போல அதிகமாகச் செயல்படுவதில்லை.

நாய்கள் நாக்கைத் தொங்கவிட்டு வேகமாகச் சுவாசிக்கும் போது, வாய் மற்றும் நாக்கின் வழியாக நீராவி வெளியேறுகிறது. இது உடல் வெப்பத்தைக் குறைக்க உதவுகிறது. சில நாய்களுக்குக் குறைந்த அடர்த்தியான ரோமங்கள் இருக்கும். இது உடல் வெப்பத்தை வெளியேற்ற உதவுகிறது.

## கேளுங்கள்!

**உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.**



முகவரி :
'அறிவோம் ஆயிரம்', 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





# பாலித்தீன் பையில் பாராசூட் செய்யலாம்

## தேவையான பொருட்கள்:

- பாலித்தீன் பை
- நூல்
- செல்லோ டேப்
- சிறிய நட்டு











**செய்முறை:**

1. பாலித்தீன் பையை 2 அடி விட்டம் அளவிற்கு வட்டவடிவில் வெட்டிக் கொள்ள வேண்டும்.
2. மூன்று அடி நீளத்திற்கு 8 நூல் துண்டுகளை வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். நூல் துண்டுகளைப் படத்தில் காட்டியவாறு பாலித்தீன் பையைச் சுற்றி செல்லோ டேப் கொண்டு ஒட்டிக்கொள்ள வேண்டும்.
3. ஒவ்வொரு நூல் துண்டும் சம அளவு இடைவெளியுடன் இருக்க வேண்டும்.
4. அனைத்து நூல்களின் கீழ்முனைகளையும் இணைத்து பாலித்தீன் பையை குடை போன்று படத்தில் காட்டியுள்ளவாறு மடித்துக் கொள்ள வேண்டும்.
5. நூல்களின் முனைகளை நட்டுடன் இணைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும்.
6. காற்று வீசும் நேரத்தில் உயரமான இடத்தில் இருந்து பாராசூட்டைக் கீழே விட வேண்டும். பாராசூட் அழகாகப் பறப்பதைக் காணலாம்.







நன்றி: www.aravindguptatoys.com


- இது இலவச தொலைபேசி எண்
- இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
- உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்



சைல்டு லைன் 1098

(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 1 கண்டுபிடியுங்கள்

கீழே ஆங்கில எழுத்துகளுக்கு இணையான கணித எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதனைக் கொண்டு கட்டங்களில் உள்ள எண்களைப் பொருத்தினால் 6 விலங்குகளின் பெயர்கள் வரும். அதைக் கண்டுபிடித்து மகிழுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| N | O | C | W | M |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| K | H | E | P | A |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| L | R | S | U | |
| 11 | 12 | 13 | 14 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 3 | 10 | 5 | 8 | 11 |
| 2. | 5 | 2 | 14 | 13 | 8 |
| 3. | 13 | 1 | 10 | 6 | 8 |
| 4. | 13 | 7 | 8 | 8 | 9 |
| 5. | 13 | 7 | 10 | 12 | 6 |
| 6. | 4 | 7 | 10 | 11 | 8 |

## 2 புதிர்கள்!

1. ஓட்டப் பந்தயத்தில் கடைசியாக ஓடுபவரை முந்தினால் நீங்கள் எந்த இடத்தில் ஓடிக் கொண்டிருப்பீர்கள்?


2. ஓட்டப் பந்தயத்தில் இரண்டாவதாக ஓடுபவரை முந்தினால் நீங்கள் எந்த இடத்தில் ஓடிக் கொண்டிருப்பீர்கள்?

3. ஒருவர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தார். அப்போது அவரின் வலது பக்கம் சூரியன் மறைந்தது. அப்படியெனில் அவர் எந்தத் திசையை நோக்கிச் சென்றார்?




## 3 10 வித்தியாசங்கள்

இரண்டு படங்களுக்கும் இடையே பத்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடி!



விடைகள் 20ஆம் பக்கம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




# மாணவர் கலைவண்






▸ சி. ரகுநாதன்,
6ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
மூக்கனூர், திருப்பத்தூர்.





▸ த. தருண்,
7ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப்
பள்ளி, கோவிந்தபுரம்,
அரியலூர்.






▸ மு. தீபிகா,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி, டீக்கடை,
தருமபுரி.





▸ தி. தீபிகஷா,
8ஆம் வகுப்பு, மண்டபம் ஊராட்சி
ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பட்டணம்காத்தான், இராமநாதபுரம்.

▸ எஸ்.
6ஆம் வ
அரசு உ
பள்ளி, கு
விழுப்புர





▸ எம். கவின் அமுதன்,
8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப்
பள்ளி, ஆயக்குடி,
திண்டுக்கல்.






▸ பா. பவித்ரா,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி, ஏமம்,
கள்ளக்குறிச்சி.



▸ எஸ். ஹேம சந்திரன்,
9ஆம் வகுப்பு, அரசு
ஆதி திராவிட நல
உயர்நிலைப் பள்ளி,
83 தண்டலம்,
காஞ்சிபுரம்.



▸ அ.
8ஆம்
நடுநி
கருமா
திருப்பு





▸ க. கலைநிலா,
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி, நச்சினார்குடி,
மயிலாடுதுறை.





▸ க. தேசிகா,
7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
வாணக்கன்காடு, புதுக்கோட்டை.



▸ ஆ. மோனிஸ்,
8ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்
பள்ளி,
கவுண்டர்பாளையம்,
பெரம்பலூர்.



▸ ஆ
8ஆம்
மாதிரி
மேல்நி
தோட்ட
வேலூ

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# ர்
# வண்ணம்



▸ **சாவி. யஷ்வந்த்,**
8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி,
சவுரியூர், சேலம்









▸ **எஸ். கிருத்திகா,**
6ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்
பள்ளி, குமுளம்,
விழுப்புரம்.





▸ **எம். மோகன சந்திரன்,**
9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப்
பள்ளி, பழையனூர்,
சிவகங்கை.






▸ **செ. இனியா,**
7ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப்
பள்ளி, திருவோணம்,
தஞ்சாவூர்.







▸ **அ. சுமையா பர்வீன்,**
8ஆம் வகுப்பு, மாநகராட்சி
நடுநிலைப் பள்ளி,
கருமாராம்பாளையம்,
திருப்பூர்.





▸ **க. நித்திகா,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப் பள்ளி, மொன்னவேடு,
திருவள்ளூர்.





▸ **எம். மாரி அஸ்வின் ராஜா,**
8ஆம் வகுப்பு, நகராட்சி
நடுநிலைப் பள்ளி, மேனூர்,
தூத்துக்குடி







▸ **ஆர். ஹாசினி,**
8ஆம் வகுப்பு, அரசு
மாதிரி பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
தோட்டப்பாளையம்,
வேலூர்.





▸ **சு. பவித்ரா,**
7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப்
பள்ளி, செண்பகராம நல்லூர்,
திருநெல்வேலி.

படைப்புகளை அனுப்பும் மாணவர்கள் தங்களின் புகைப்படம், பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மாவட்டம், தொலைபேசி எண் போன்ற விவரங்களையும் மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி : 'மாணவர் கலைவண்ணம்',
**'தேன்சிட்டு' சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# ஒரு துண்டு நிழல்

(கொரிய நாட்டு நாடோடிக் கதை)

**அந்த ஆண்டிலேயே மிகவும் சூடான நாள் அது. எரியும் வானத்திலிருந்து சூரிய ஒளி வந்தது.**

ஓர் இளைஞன் ஒரு துண்டு நிழலைத் தேடினான். ஒரு வீட்டின் அருகில் எல்கோவா மரம் நின்றிருந்தது. குளிர்ந்த பசுமையான மரத்தின் நிழலில் அவன் உட்கார்ந்தான்.

வீட்டிலிருந்து வயதான ஒருவர் வேகமாக வெளியே வந்தார். இளைஞனைப் பார்த்து, "இங்கிருந்து போ... இது என் நிழல்" என்று கத்தினார்.

"எப்படி இது உன் நிழல் ஆகும்?" இளைஞன் கேட்டான்.

"என் தாத்தாவுக்கும் தாத்தா, தாத்தாவுக்கும்... அவர் தாத்தா, தாத்தாவுக்கும் முன் வைத்த மரம் இது. எனவே, மரத்தின் நிழல் என்னுடையது" என்றார் முதியவர்.

ஒரு நிமிடம் இளைஞன் யோசித்தான், "உங்களுக்கு உரிமையான நிழலை எனக்கு விற்க முடியுமா?" என்று கேட்டான்.

"மரத்தின் நிழலையா கேட்கிறாய்? சரி, விற்கிறேன்" என்றார்.

இளைஞன் நிழலுக்குப் பணம் கொடுத்தான். மறுபடியும் உட்கார்ந்து நிழலை அனுபவித்தான்.

வானத்தில் சூரியன் நகர்ந்தது. அதனால் இளைஞன் உட்கார்ந்திருந்த நிழலும் வளர்ந்தது. அந்த நிழல் வீட்டின் வாசல் வரை நீண்டது. எனவே இளைஞன் வாசலில் உட்கார்ந்தான்.

வீட்டிற்குள்ளிருந்த முதியவர் வேகமாக வெளியே வந்தார். தோளைக் குலுக்கிக் கொண்டு, "போ, வெளியே" என்று கத்தினார். "இது என்னுடைய வாசல்" என்றார்.

"இது என் நிழல். விலைக்கு வாங்கி இருக்கிறேன்" என்றான் இளைஞன். முதியவர் என்ன சொல்வது எனத் தெரியாமல் விழித்தார்.

வானத்தில் சூரியன் நகர்ந்தது. மரத்தின் துண்டு நிழல் வளர்ந்தது. தாழ்வாரம் வரை நீண்டது. எனவே இளைஞன் தாழ்வாரத்தில் போய் உட்கார்ந்தான்.

முதியவர் வேகமாக வெளியே வந்தார். "இது என்னுடைய தாழ்வாரம். வெளியே போ..." என்று கத்தினார்.

"இங்கே இருப்பது என் நிழல். நான் விலைக்கு வாங்கியது" என்றான் இளைஞன்.

முதியவர் அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை.

சூரியன் மறையும் வரை இளைஞன் நிழலில் உட்கார்ந்து அனுபவித்தான். இரவு வீட்டுக்குப் போய் விட்டான்.

அடுத்த நாள் இளைஞன் வந்தான். முற்றத்திலும் தாழ்வாரத்திலும் விழும் நிழலை அனுபவித்தான்.

அடுத்த நாளும் வந்தான். அதற்கு அடுத்த நாளும் வந்தான்.


ஊர் மக்கள் பார்த்தனர். முதியவரைப் பார்த்துச் சிரித்தனர். "நிழலை அவனுக்கு விற்று விட்டாய். மீண்டும் அதை ஏன் வாங்கிக் கொள்ளக் கூடாது" என்று கேட்டனர்.

ஆனால் அந்த இளைஞன் மரத்தின் நிழலை விற்கத் தயாராக இல்லை.

எனவே முதியவர் நடு இரவில் குனிந்த தலை நிமிராமல் வீட்டை விட்டுப் போய்விட்டார்.

ஒரு துண்டு நிழல் விலையில் இளைஞனுக்கு முற்றம், தாழ்வாரம், வீடு எல்லாமே கிடைத்தது.

தமிழில்: சுகுமாரன்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# விருதுநகர் மாவட்டம்



வடக்கில் மதுரை, சிவகங்கை மாவட்டங்கள், தெற்கில் திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்கள், கிழக்கே இராமநாதபுரம் மாவட்டம், மேற்கே கேரளாவின் இடுக்கி மாவட்டம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டது விருதுநகர் மாவட்டம். 1985ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து பிரித்து இம்மாவட்டம் உருவாக்கப்பட்டது.

விருதுப்பட்டி எனும் சிற்றூர் விருதுநகராக மாறி பஞ்சு, பருப்பு, மிளகாய் உள்ளிட்ட விளைபொருள்கள் பெருமளவில் இங்கிருந்து பிற மாநிலங்களுக்கும், நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. இதற்காகவே விருதுநகர் இரயில் நிலையத்தில் நீண்ட நடைமேடை அமைக்கப்பட்டுள்ளது. சிவகாசிப் பட்டாசு, திருவில்லிபுத்தூர் பால்கோவா ஆகியவை உலக அளவில் பிரபலமாக விளங்குகின்றன.

கோவிலாங்குளம், இருக்கன்குளம், நரிக்குடி ஆகிய ஊர்களில் பழங்கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் மிகப் பழமையான அரசுகளில் ஒன்றான பாண்டிய நாட்டின் அங்கமாக இப்பகுதி தொடக்கம் முதலே இருந்து வந்துள்ளது.

நூற்றியெட்டு வைணவத் திருத்தலங்களுள் ஒன்றான திருவில்லிபுத்தூரில்தான் பெரியாழ்வாரும், அவரது மகளும், ஒரே பெண் ஆழ்வாருமான ஆண்டாளும் அவதரித்தனர். எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திராவிடக் கட்டடக் கலையின் அடையாளமாக விளங்குகிறது. சோழர்களும், இஸ்லாமிய ஆட்சியாளர்களும் பிறகு பிரிட்டிஷ்காரர்களும் இப்பகுதியை அவரவர் காலங்களில் ஆளுமை செலுத்தினர்.

நாடு சுதந்திரமடைந்து, மொழிவாரி மாநிலங்கள் உருவானபோது, சென்னை மாகாணத்தின் சின்னமாகத் திருவில்லிபுத்தூர் கோயிலின் கோபுரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.


இருக்கன்குடி மாரியம்மன் கோயில், தோணுகால் வெயிலுகந்தம்மன் கோயில், சிவகாசி பத்ரகாளியம்மன் கோவில், அருப்புக்கோட்டை முத்துமாரியம்மன் கோவில் உள்ளிட்டவை இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன.

வைப்பாறு, குண்டாறு, அர்ஜுனா ஆறு, கௌசிகா நதி உள்ளிட்ட ஆறுகளும், பிளவக்கல், ஆனைக்குட்டம், கோவிலாறு, சாஸ்தா கோவில், குல்லூர் சந்தை அணைகளும் இம்மாவட்டத்தின் நீர்த்தேவையை நிறைவு செய்கின்றன.

இராஜபாளையம் நகருக்கு அருகில் இருக்கும் அய்யனார் அருவி, செண்பகத்தோப்பு அருவிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாக விளங்குகின்றன.

உலகப் புகழ்பெற்ற இராஜபாளையம், சிப்பிப்பாறை வகை நாய்கள் இந்த மாவட்டத்தில் இருந்துதான் தோன்றின. திருவில்லிபுத்தூர் வனவிலங்குச் சரணாலயம் யானை, புலி, சிறுத்தை, வரையாடு, கடமான், கேளையாடு, முள்ளம் பன்றி, சோலைமந்தி ஆகியவற்றின் வாழிடமாக உள்ளது. மேலும் அழிவின் விளிம்பில் இருக்கும் நரை அணில்கள் (Grizzled Squirrel) எனப்படும் மலை அணில்கள் இங்கு அதிகம் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்திவருகிறது.

– சரவணன் பார்த்தசாரதி



## மாவட்டத்தின் பெருமைக்குரியவர்கள்

**முன்னாள் முதல்வர்கள்**
- பூ.ச. குமாரசுவாமி ராஜா
- கர்மவீரர் காமராஜர்



**மொழிப்போர்த் தியாகி**
- சங்கரலிங்கனார்

**மூத்த அரசியல் தலைவர்கள்**
- தங்கபாண்டியன்
- வைகோ
- முன்னாள் சபாநாயகர் காளிமுத்து
- காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்

- துறவி ரமணர்,
- தொல்லியலாளர் சொ. சாந்தலிங்கம்,

**எழுத்தாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான**
- தமிழச்சி தங்கபாண்டியன்,

**கல்வியாளர்கள்**
- கே.ஆர். ஸ்ரீநிவாசன்,
- வில்லியம் செல்வமூர்த்தி,
- மாரியப்பன் பெரியசாமி,
- வீ. ரேணுகாதேவி,



**ஊடகவியலாளர்**
- நக்கீரன் கோபால்

**எழுத்தாளர்கள்**
- நா. பார்த்தசாரதி
- பாமா
- மேலாண்மை பொன்னுசாமி
- எஸ். ராமகிருஷ்ணன்
- ச.தேவதாஸ்
- திலகபாமா
- லீனா மணிமேகலை
- மா. பா. குருசாமி



**சங்கப் பாடல்களை மொழிபெயர்த்த**
- மு. கு. ஜகந்நாதராஜா

**பண்பாட்டு ஆய்வாளர்**
- ராஜ் கௌதமன்,
- இசைக் கலைஞர் கொத்தமங்கலம் சீனு,
- நாடகக் கலைஞர் முருகபூபதி,
- நாட்டுப்புறப் பாடகர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்,

**திரைக் கலைஞர்கள்**
- எம். முத்தையா
- வி.கே. ராமசாமி
- வசந்தபாலன்
- சமுத்திரக்கனி
- விஜய் சேதுபதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




# பேரீச்ச மரம்

**உங்களுக்குப் பேரீச்சம்பழம் பிடிக்கும் தானே? அது காய்க்கும் பேரீச்ச மரத்தைப் பற்றி அறிந்துகொள்வோம்.**



- இயற்கையாகவே இனிப்புச் சுவை அதிகம் கொண்ட பேரீச்ச மரம் பனைக் குடும்பத்தைச் சார்ந்தது. இதில் இருநூறு வகைகள் உள்ளன.
- இம்மரங்களை மிக வெப்பமான வறண்ட இடங்களிலும், பாலைவனங்களிலும் அதிகம் காணலாம். இதனால்தான் நம் ஊர்களில் இதை அதிகம் பார்க்க முடிவதில்லை.
- குறைந்த அளவு நீரே இதன் வளர்ச்சிக்குப் போதுமானது.
- ஈரான், ஈராக், அரேபியா, ஓமன் போன்ற நாடுகளில் அதிக அளவு பயிர் செய்து வருகின்றனர். இவர்களின் முக்கிய உணவாகவும் பேரீச்சம் பழம் உள்ளது.
- இம்மரங்கள் 6 முதல் 10 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும்.
- ஒரு குலையில் நூற்றுக்கணக்கான காய்கள் தொங்கும். காய் பழமாக மாறும்போது, முதலில் மஞ்சள் நிறத்திலும் பிறகு ஆரஞ்சு, சிவப்பு, கறுப்பு நிறங்களிலும் மாறும் தன்மை கொண்டது.
- பனைமரத்தைப் போல இதிலும் ஆண் மரம், பெண் மரம் என்று இரு வகை உள்ளன. பெண் மரம்தான் அதிகப் பழங்களைத் தரும்.
- பேரீச்ச மரத்தின் ஒவ்வொரு பகுதியும் பயன்பாட்டிற்கு உகந்தது.
- இதன் ஓலை, கூரை வேயவும், பாய், கூடைகள் முடையவும் உதவுகிறது. இதன் மட்டையில் இருந்து நார் உரித்துக் கயிறு திரிக்கிறார்கள்.
- பேரீச்சம் விதையில் இருந்து சமையல் எண்ணெய் எடுக்கின்றனர். எண்ணெய் எடுத்தது போக எஞ்சிய பகுதியைக் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்துகின்றனர்.



## சுவாரசியத் தகவல்கள்:

- ஓமன் நாட்டு மக்கள் தங்களுக்கு மகன் பிறந்தால் ஒரு பேரீச்ச மரத்தை நடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அது செழித்து வளர்ந்தால் தங்கள் குடும்பம் வறுமையில் வாடாது என்பது அவர்களின் நம்பிக்கை.
- பூமியின் விளைநிலங்களில் 3 சதவிகிதம் பேரீச்சையால் ஆனது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகல் வேடம்



**கலைகளே மனிதர்களின் மனங்களைப் பக்குவப்படுத்துகின்றன. அப்படியான கலைகளில் ஒன்றுதான் பகல் வேடம். பேச்சு மொழியில் பகல் வேஷம் என்பார்கள்.**

- கலைஞர்கள் இதிகாச, புராணக் கதாபாத்திரங்களைப் போலவே வேடமிட்டு வீடு வீடாகச் செல்வார்கள். அப்போது தன் வேடத்திற்கு உரிய கதைகளைச் சொல்வதோடு நல் உபதேசங்களையும் சொல்வார்கள். பகல் பொழுதில் வேடமிட்டுச் செல்வதால் பகல் வேஷக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

- பகல் வேடக் கலைஞர்கள் ஒரு குழுவாகச் செல்வது வழக்கம். ஒருவர் அல்லது இருவர் வேடம் அணிந்திருப்பர். அவர்கள் புராணக் கதைகளைச் சொல்வர். அப்போது உடனிருக்கும் ஒருவர் அதில் கேள்விகளைக் கேட்பது போலவோ, பின்பாட்டுப் பாடுவது போலவோ இருப்பார். அவர் இசைக்கருவி வாசிக்கலாம் அல்லது தனியே ஒருவர் வாசிக்கவும் செய்வார்.

- நாடகங்களில் வருவதுபோல வேடமிட்டாலும் கூட உடல் பாவனைகள் செய்து நடித்துக் காட்ட மாட்டார்கள். பாடல்கள், கதைகள் மாத்திரமே சொல்வார்கள்.

- தினமும் ஒரு கதாபாத்திர வேடமிட்டு ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் தொடர்ந்து செல்வர். கதைகளை விளக்கமாகச் சொல்வார்கள். மக்கள் ஆர்வத்துடன் கேட்பதோடு தெருவின் ஓரிடத்தில் கூடி நின்று அவரை நீண்ட நேரம் கதை சொல்ல வைத்தும் இரசிப்பார்கள். கடைசி நாளில் வேடம் அணியாமல் சென்று மக்கள் தரும் அன்பளிப்பைப் பெற்றுக் கொள்வார்கள். அதற்கு அடுத்து வேறொரு பகுதிக்குச் செல்வார்கள். செல்லும் கிராமம் சிறியதாக இருக்கும்பட்சத்தில் மூன்று நாட்களில் வேஷமிடுவதை முடித்துக் கொள்வார்கள்.

- உடும்பின் தோலால் செய்யப்பட்ட கஞ்சிரா எனும் இசைக் கருவிதான் பெரும்பாலும் இதில் பயன்படுத்தப்படும். சிலர் ஹார்மோனியம் இசைப்பார்கள்.



இக்கலை பல்லாண்டுகளாக நிகழ்த்தப்படுகிறது என்றும், மன்னர்கள் இக்கலைஞர்களை மற்ற நாடுகளின் செய்திகளை அறிந்துவரும் ஒற்றர்களாகவும் பயன்படுத்தினர் என்றும் கூறப்படுகிறது.



பகல் வேடக் கலை தஞ்சாவூருக்கு அருகே உள்ள வல்லம் பகுதியில்தான் முதன்முதலாகத் தோன்றியது என்று கூறப்படுகிறது. இன்னும் சிலர், வேறு மாநிலங்களில் இருந்து இக்கலை தமிழ்நாட்டுக்கு வந்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





# ரொம்பச் சத்தம்

கதை: ரோஹினி நிலெகனி
ஓவியங்கள்: ஏஞ்சல், உபேஷ்
தமிழில். எஸ்.ஜெயராமன்









Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





# பாய்ந்து முந்தும் படகோட்டுதல்



**ஆற்றையோ ஏரியையோ கடக்க படகில் செல்வோம். சில ஊர்களில் படகுப் போட்டிகள் நடத்தப்படும். ஆனால், படகோட்டுதல் போட்டி (Rowing) ஒலிம்பிக்கில் கூட நடத்தப்படுவது பலருக்கும் புதிய தகவலாக இருக்கும்.**

1896ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் தொடங்கியது முதலே, படகோட்டுதல் போட்டி அதன் பட்டியலில் ஒரு விளையாட்டாக இருந்தது. அப்போது நிலவிய மோசமான வானிலை காரணமாக அந்த ஆண்டு போட்டி நடத்தப்படவில்லை.

1900ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான படகோட்டுதல் போட்டி நடைபெற்றது. 1976ஆம் ஆண்டுதான் ஒலிம்பிக்கில் பெண்களுக்கான போட்டி தொடங்கப்பட்டது.

### அடிப்படை விதிகள்

சர்வதேசப் படகோட்டுதல் போட்டிக்கான கூட்டமைப்பு, இரண்டு அடிப்படை விதிகளை வகுத்துள்ளது. அவை,

### 1 பாதை மாறுதல்

ஒலிம்பிக் நிகழ்வுகளில் படகுக்கு ஒரு பாதை விதம் ஆறு பாதைகள் அமைக்கப்பட்டிருக்கும். மற்றொரு படகை இடித்துவிடாமல் இந்தப் பாதையில் மாறிப் பயணிக்க அனுமதி உள்ளது. அதை மீறி மற்றொரு படகை இடிக்கும் பட்சத்தில் அந்த அணி தகுதி நீக்கம் செய்யப்படும்.

### 2 தவறான தொடக்கம்

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும்தான் தொடக்கக் கோட்டினைத் தாண்ட வேண்டும். அப்படி முன்கூட்டியே தொடக்கக் கோட்டினைத் தாண்டினால் ஒரு அணிக்கு ஒருமுறை மட்டுமே அனுமதி உள்ளது. இரண்டாம் முறை அவ்வாறு செய்தால் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

### 3 யாருக்கு வெற்றி?

மற்ற விளையாட்டுகளில் புள்ளிகள் (Points) இருப்பதுபோல படகோட்டுதல் போட்டியில் தனிப்பட்ட முறையில் புள்ளிகள் என்று எதுவும் இல்லை. குறுகிய நேரத்தில் எல்லைக்கோட்டைக் கடந்து வெற்றி பெற வேண்டும்.

### படகோட்டுதல் நிகழ்வுகள்

ஒற்றையர் பிரிவு, இரட்டையர் பிரிவு, நால்வர் பிரிவு எனப் படகோட்டுதல் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவை தவிர எடை குறைந்தவர்களுக்கான போட்டி எட்டு நபர்கள் பிரிவு வரை நடைபெறும். போட்டிகளுக்கு ஏற்ப படகின் எடை, நீளம், துடுப்புகள் ஆகியவை மாறுபடும்.


### ஒலிம்பிக்கில் இந்தியா

2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் அர்ஜுன் லால் ஜெட், அரவிந்த் சிங் ஆகியோர் பங்கேற்று 11ஆம் இடத்தைப் பிடித்தனர். இதுவே ஒலிம்பிக் படகுப் போட்டியில் இன்று வரை இந்தியாவின் சாதனையாக உள்ளது.


இந்த ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க இந்தியாவைச் சேர்ந்த பல்ராஜ் பன்வார் என்பவர் தகுதி பெற்றார். ஆனால், வெல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

### வரலாற்றில் படகுப் போட்டி

பண்டைய கால எகிப்தில் படகுப் போட்டி இருந்ததாக ஒரு தகவல் உள்ளது. மனிதக் கண்டுபிடிப்புகளில் சக்கரம் போலவே படகின் துடுப்புகளும் முக்கியமானது.



## 2ஆம் பக்க விடைகள்



## 11ஆம் பக்க விடைகள்

**1 கண்டுபிடியுங்கள்**

1. Camel
2. Mouse
3. Snake
4. Sheep
5. Shark
6. Whale

**2 புதிர்கள்!**

1. ஓட்டப் பந்தயத்தில் கடைசியாக ஓடுபவருக்குப் பின்னால் யாருமே இருக்கமாட்டார்களே!
2. இரண்டாவதாக ஓடுபவரை முந்தினால் நீங்கள் இரண்டாம் இடத்தில் ஓடுவீர்கள்.
3. தெற்கு திசை.

**3 10 வித்தியாசங்கள்**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# அணைக்கட்டு நாயகன்

அந்தச் சிறுவன், தன் மூத்த சகோதரியோடு சேர்ந்து சுட்டித்தனங்கள் செய்வான். புத்திசாலியான குறும்புக்காரன் என அவன் அப்பா அவனைப் பாராட்டுவார். பிரிட்டிஷ் இராணுவத்தில் பணிபுரிந்த அவனது அப்பாவும் அண்ணனும் போரில் இறந்து விடுகிறார்கள். அரசு நடத்திய இலவச கல்விக் கூடத்தில் சேர்ந்தான்.





படிப்பை முடித்து தனது 19ஆவது வயதில் இந்தியாவுக்கு வந்தார். பொறியியல் வல்லுநராக மதுரையில் பணியாற்றினார். பசியாலும் வறுமையாலும் வாடும் மக்களைக் கண்டு அவர்களின் துயரத்தைப் போக்கச் சிந்தித்தார். மழை பெய்தால் மட்டுமே விவசாயம் என இருந்த மக்களின் வாழ்க்கையைப் பசுமையாக்க நினைத்தார். மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் கலக்கும் முல்லைப் பெரியாறு நதியை, கிழக்கு நோக்கிப் பாய வைக்கலாமே எனும் யோசனை வந்தது. அதற்கான அனுமதியை பிரிட்டிஷ் அரசிடம் பெற்றார். வேகவேகமாக நடைபெற்ற பணியைக் காட்டாற்று வெள்ளம் அடித்துச் சென்றது. மனமுடைந்த அவர், அரசிடம் மீண்டும் நிதி கேட்டுக் கெஞ்சினார். ஒரு கட்டத்தில் தன்னிடம் இருப்பவற்றை விற்று அணையைக் கட்டி முடித்தார்.

பல்வேறு நெருக்கடிகள் தன்னைச் சூழ்ந்தபோதும் தளராமல் உழைத்து முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் வேறு யாருமல்ல, ஜான் பென்னி குயிக் எனும் மக்கள் பொறியாளர்தான் அவர். அந்த அணையால் பல இலட்சம் ஏக்கர் நிலங்களில் தற்போது விவசாயம் செய்யப்படுகிறது. இந்தியாவில் பிறந்து, சொந்த நாடான பிரிட்டனில் படித்து, மீண்டும் இந்தியாவுக்கு வந்து மக்கள் பணியாற்றி, 1911ஆம் ஆண்டு இங்கிலாந்தின் கேம்பர்லியில் இறந்தார்.



ஜான் பென்னி குயிக்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# நலம் தரும் அதிமதுரம்



அதிமதுரம் - பெயரே மிக அழகாக இருக்கிறது அல்லவா? அழகு மட்டுமல்ல, மருத்துவக் குணங்களும் கொண்ட தாவரத்தின் பெயர்தான் அதிமதுரம். பலரும் அடிக்கடி கேள்விப்படாத தாவரமாக இருக்கலாம். ஆனால், இது சித்த மருத்துவத்தில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

அதிமதுரம் மூலிகைச் செடியாகும். இது ஒரு மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. இவற்றின் பூக்கள் நீல நிறத்தில் இருக்கும்.

அதிங்கம், மதுகம், அட்டி ஆகியவை இதன் வேறு பெயர்கள். ஆங்கிலத்தில் இது Licorice என்று குறிப்பிடப்படுகிறது. கிரேக்கம்தான் இதன் பூர்வீகம் எனக் கூறப்படுகிறது. Licorice என்பது Glycyrrhiza எனும் கிரேக்கச் சொல்லில் இருந்து பெறப்பட்டுள்ளது.

மருத்துவக் குணங்கள் நிறைந்த அதிமதுரத்தின் வேர் ஒரு மீட்டர் நீளமும், ஒரு செ.மீ. விட்டமும் (Diameter) கொண்டது.

இந்தியாவில் இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், இமயமலை ஆகிய இடங்களில் அதிகளவில் இது பயிரிடப்படுகிறது.


கிளைசிரைசா கிளாப்ரா எல் என்பது இதன் தாவரவியல் பெயர். இது ஃபேபேசி எனும் பயறு வகைக் குடும்பத்தைச் சார்ந்தது.

இருமல், தொண்டைக்கம்மல், சுவாசக் கோளாறு உள்ளிட்ட உடல்நலக் குறைபாடுகளுக்கு அதிமதுரம் மருந்தாகப் பயன்படுவதாகக் கூறுகிறார்கள். ஆயினும் மருத்துவர் அறிவுரைப்படியே மருந்து உட்கொள்ள வேண்டும்.



▶ பண்டைய கால எகிப்து ஆட்சியாளர்கள் அதிமதுரத்தைச் சுவை மிகுந்த பானமாகப் பருகி வந்துள்ளனர்.

▶ துட்டன்காமூன் எனும் எகிப்திய அரசனுக்கு அதிமதுரம் மிகவும் பிடிக்கும் என்பதால், அவனது கல்லறையில் அதிமதுரம் வைத்துப் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.





▶ அதிமதுரச் சாறு சேர்க்கப்பட்ட மிட்டாய்கள் சந்தையில் விற்பனைக்கு உள்ளன. ஜார்ஜியோ அமரெள்ளி (Georgio Amarelli) என்பவரால் இதற்காக 1731ஆம் ஆண்டு கான்சியோ எனும் நிறுவனம் தொடங்கப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



Then Chittu Fortnightly Registered with RNI No TNTAM/2022/82345
Postal Registration No TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No TN/PMG(CCR)WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 01-05 September 2024 Posted at Egmore RMS/ Patrika Channel
இதழ் 43

# செப்டம்பர் 01-15

## பிறந்தவர்கள்



### தாதாபாய் நவ்ரோஜி 4

இந்தியத் தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர்களில் ஒருவரான தாதாபாய் நவ்ரோஜி 1825ஆம் ஆண்டு பம்பாயில் பிறந்தார். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக மக்களிடம் சுதந்திர உணர்வை ஏற்படுத்த பல சங்கங்களைத் தொடங்கினார். இவர் எழுதிய பாவர்ட்டி அண்ட் அன் – பிரிட்டிஷ் ரூல் இன் இண்டியா (Poverty and unbritish rule in India) எனும் நூல், அன்றைய ஆங்கில ஆட்சியில் இந்தியர்கள் பட்ட துயரங்களை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.



### 15 சி.என். அண்ணாதுரை

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், சிறந்த தமிழ் அறிஞருமான அண்ணாதுரை 1909ஆம் ஆண்டு பிறந்தார். நமது மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி மொழி உரிமையை நிலைநாட்டியவர். தந்தை பெரியாரின் முற்போக்குக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு அவருடன் இணைந்து பணியாற்றி வந்தார். மாநில உரிமைகளுக்காகவும், மொழி உரிமைக்காகவும் பல செயல்மிகு நிகழ்வுகளை நடத்தியுள்ளார். சிறந்த பேச்சாளர், அருமையான எழுத்தாளர், வியக்கத்தகு நடிகர், பன்முக ஆளுமை கொண்டவர்.



### வ.உ. சிதம்பரம் 5

இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர், 'கப்பலோட்டிய தமிழன்' எனவும் போற்றப்படுபவர் வ.உ.சிதம்பரம் 1872ஆம் ஆண்டு பிறந்தார். ஆங்கிலேயர்களின் வணிகத்தைத் தடுக்க அவர்களை எதிர்த்து சுதேசிக் கப்பலை இயக்கிய பெருமைக்கு உரியவர். பெரும் செல்வந்தரான இவர், விடுதலைப் போராட்டக் களத்தில் நின்று வறுமைக்குத் தள்ளப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டு செக்கிழுக்க வைக்கப்பட்டு கொடுமையை அனுபவித்தார். சிறந்த தமிழறிஞரான இவர், பல நாளிதழ்களில் பணியாற்றியுள்ளார்.

### சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன்

ஆசிரியராகப் பணியாற்றி பின்னாளில் இந்தியாவின் குடியரசுத் தலைவராக உயர்ந்தவர் சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவரது பிறந்த தினமான செப்டம்பர் 5 அன்று ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இவருக்கு 1954 ஆம் ஆண்டு இந்திய அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான பாரத ரத்னா வழங்கப்பட்டது.



5

## சிறப்பு தினங்கள்



### தேசிய ஊட்டச்சத்து வாரம் 1-7

இந்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து மன்றம் சார்பாக நாடு முழுவதும் செப்டம்பர் 1 முதல் 7 வரை தேசிய ஊட்டச்சத்து வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. நாட்டின் வளர்ச்சியில் ஊட்டச்சத்தில் ஏற்படும் மாற்றத்தை நிலைநிறுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.



### தேசிய வன தியாகிகள் தினம் 11

இந்தியாவில், தேசிய வன தியாகிகள் தினம் செப்டம்பர் 11 அன்று நினைவு கூரப்படுகிறது. 1730ஆம் ஆண்டு இந்தியாவில் வன வளத்தை அழிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் நடைபெற்ற கெஜர்லி படுகொலை நினைவாகவே இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.




### சர்வதேச மக்களாட்சி தினம் 15

சர்வதேச மக்களாட்சி தினம் செப்டம்பர் 15 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்படி இந்நாள் கொண்டாடப்படுகிறது. மக்களாட்சி முறையை ஊக்குவிக்கவும், அது குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்நாள் உள்ளது. இந்நாளினை 192 நாடுகள் கடைப்பிடிக்கின்றன.

உங்களுக்கு தேன்சிட்டு இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு, ஈ.ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com